

சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியா ப்பட்டணம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கிளைச் செயலாளர்கள் , பிஎல்ஏ2, பிஎல்சி ஆகியோர்களுக்கு விழாக்காலம் முன்னிட்டு புத்தாடை மற்றும் இனிப்புகளை கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி.,வழங்கினார். அப்போது ஒன்றிய செயலாளர் க.ரத்தினவேல், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம் மற்றும் ஒன்றிய திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாநகராட்சி, 15 வேலம்பாளையம் பகுதி, வார்டு எண் 22 க்குட்பட்ட மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 15 வேலம்பாளையம் மண்டல முன்னாள் தலைவர், 22 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வே.ராதாகிருஷ்ணன் 500க்கும் மேற்பட்ட மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கினார். இதில் வட்டக் கழக செயலாளர் ராஜ்குமார், திருப்பூர் வடக்கு மாநகர சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் வேலுச்சாமி, காலேஜ் ரோடு மோகன், ஸ்கூல் வீதி குமார், துப்புரவு மேற்பார்வையாளர்கள் சுதாகர், சந்திரிக்கா உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம்

# குன்னம் தொகுதி - செந்துறையில் புதிய குளிர்சாதன பேருந்து!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர் அக் 20

அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி செந்துறை ஊராட்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் செந்துறை மாதவரம் செல்லும் புதிய குளிர்சாதன பேருந்தை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி கலந்துகொண்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் போக்குவரத்து கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி செந்துறை ஊராட்சி ஒன்றியம், செந்துறையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்(விழு)லிட், கடலூர் மண்டலம் புதிய குளிர்சாதனப் பேருந்து சேவையினை விருத்தாசலத்தி லிருந்து காலை 5.30 மணிக்கு புறப்பட்டு ஆண்டிமடம் ஜெயங்கொண்டம் வழியாக செந்துறை சென்றடையும் வகையிலும், செந்துறையிலிருந்து காலை 7.10 மணிக்கு புறப்பட்டு ஆர்.எஸ்.மாத்தூர், பெண்ணாடம், திட்டக்குடி, தொழுதூர், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் வழயாக சென்னைமாதவரம் சென்றடையும் வகையிலும், சென்னை மாதவரத்தில் மாலை 4.30 மணிக்கு புறப்பட்டு திண்டிவனம், விழுப்புரம் வழியாக விருத்தச்சாலம் வந்தடையும் வகையிலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

புதிய குளிர்சாதனப் பேருந்து சேவையை துவக்கி வைத்த பின்னர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தீபாவளி திருநாளை முன்னிட்டு பொதுமக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு பேருந்து வசதிகளை சிறப்பாக ஏற்பாடு செய்திட வேண்டும் என அறிவுரை வழங்கியதன் அடிப்படையில் சிறப்பு கூட்டம் நடைபெற்று அதில் திட்டமிட்டபடி வியாழக்கிழமை முதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது. சென்னையிலிருந்து வழக்கமாக 2092 பேருந்துகள் தமிழ்நாட்டில் பிற பகுதிகளுக்கு செல்லும். அது மட்டுமல்லாது முதல் நாள் வியாழக்கிழமை சென்னையிலிருந்து 760 பேருந்துகளும், நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை 2185 பேருந்துகள் இயக்குவதற்கு திட்டமிடப்பட்டது. முதல் நாள் 1,28,000 நபர்கள் சென்னையில் இருந்து பிற பகுதிகளுக்கு பயணம் செய்துள்ளனர். நேற்றைய தினம் 2,38,000 நபர்கள் சென்னையில் இருந்து பிற பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு உள்ளனர். மொத்தமாக இரண்டு நாட்களில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமானோர் பயணம் மேற்கொண்டுள்ளனர். இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுகிழமைகளில் ஏற்கனவே இயக்கபடும் 2092 பேருந்துகளுடன் கூடுதல் பேருந்துகளும் இயக்கப்படவுள்ளது. இன்றையதினம் 1875 பேருந்துகளும் நாளை 750 பேருந்துகளும் இயக்கப்பட இருக்கிறது. வழக்கமான பேருந்துகளை விட கூடுதலாக பேருந்துகளை திட்டமிட்டு இயக்கியதன் காரணமாக நேற்று திட்டமிடப்பட்டதை விட 175 பேருந்துகள் குறைவாகத்தான் இயக்கப்பட்டது. ஆனாலும் விடியற்காலை 2 மணியளவில் மொத்தமாக வந்திருந்த அனைத்து பயணிகளும் சொந்த ஊர் செல்வதற்கு அனுப்பி வைக்கபட்டுள்ளனர். பொதுமக்கள் எவ்வித பாதிப்பும் இல்லாமல் பயணம் செய்வதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க கூடுதல் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆம்னி பேருந்துகள் கட்டண உயர்வு என்பது கடந்த வாரம் ஒரு செய்தியாக இருந்தது. ஆனால் நான்கு நாட்களுக்கு முன்பாக போக்குவரத்து ஆணையர், அவர்களை அழைத்து ஆலோசனைக் கூட்டத்தினை நடத்தி அறிவுரைகள் வழங்கிய பிறகு அந்த பிரச்சனையும் எழவில்லை. ஆம்னி பேருந்துகள் இயக்கப்படுகின்ற பகுதிக்கு நானே நேரில் சென்றேன். எந்த புகாரும் இல்லை. மேலும், அரசுப் பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு சுமார் 1,68,000 நபர்கள் முன்பதிவு செய்து பயணம் செய்திருந்தனர். ஆனால் தற்போது நேற்றைய நிலவரப்படி சுமார் 2,80,000 நபர்கள் முன்பதிவு பயணம் மேற்கொண்டுள்ளனர். போக்குவரத்து துறையில் எப்போதும் இல்லாத அளவிற்கு நேற்றைய தினம் மட்டும் சுமார் 83,000 நபர்கள் முன்பதிவு செய்து பயணித்துள்ளனர். அதில் சென்னையிலிருந்து மட்டும் 53,000 நபர்கள் முன்பதிவு செய்து தங்களது பயணத்தை மேற்கொண்டுள்ளனர். தனியார் பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணித்தவர்கள் தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் முன்பதிவு செய்து பயணிக்கின்றனர் என்பதையே இது உணர்த்துகிறது.

கொரோனா காலக்கட்டத்திற்கு பிறகு இரு சக்கர வாகனங்களில் பயணிப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இப்போது அந்த எண்ணிக்கையும் குறைந்துள்ளதாக தோன்றுகிறது. நேற்று இரவு கிளாம்பாக்கம் ஆய்வு முடிந்த பிறகு அரியலூர் வருகின்ற வழியில் இருசக்கர வாகனத்தில் பயணிப்போர் எண்ணிக்கை குறைவாக இருந்ததை காண முடிந்தது. அவர்களும் முன்பதிவு செய்து பயணிக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. பொதுமக்கள் அரசு போக்குவரத்து கழகத்தை அதிக அளவில் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மிகுந்த கவனத்தோடு ஒவ்வொரு பண்டிகை நாட்களிலும் முறையாக திட்டமிட்டு எவ்வளவு பேருந்துகள் இயக்கப்படுகிறது என்பதை அறிவித்து, பேருந்துகள் இயக்கப்படுவதால் பொதுமக்கள் எவ்வித பாதிப்பும் இல்லாமல் பயணிக்கின்றனர். நேற்றையதினம் கிளாம்பாக்கத்தில் ஆய்வு செய்கின்ற போது முன்பு பதிவு செய்திருந்தவர்கள் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே வருகை தந்து காத்திருந்து அவர்களுக்கான பேருந்துகளில் பயணிப்பதை பார்க்க முடிந்தது. அதேபோன்று முன்பு பதிவு செய்யாத பயணிகளும் வருகை தருவதற்கு ஏற்றவாறு பேருந்துகள் திட்டமிட்டு இயக்குப்படுவதால் அவர்களும் எவ்வித சிரமமும் இன்றி பயணம் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் தனியார் ஒப்பந்த பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. சிறப்பு பேருந்துகளை இயக்குவதற்கு அதிக பயணிகள் செறிவு இல்லாத வழித்தடங்க ளில் இயங்குகின்ற பேருந்துகள் வழக்கமாக சிறப்பு பேருந்துகளாக இயக்கப்படும். ஆனால் இப்பொழுது அந்த பேருந்துகள் எடுக்கப்படாமல், அந்த பேருந்துகள் அங்கேயே செயல்படுகின்ற சூழலில் இந்த ஒப்பந்த பேருந்துகளை எடுத்து செயல்படுத்துகிறோம். வழக்கமான வழித்தடத்தில் இயங்குகின்ற பேருந்துகளை எடுக்கும்போது அதனை இயக்குகின்ற ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு கூடுதல் பணிச்சுமை இருக்கும். இப்போது அவர்களுக்கும் அந்த கூடுதல் பணிச்சுமை குறைந்துள்ளது. எனவே இது வெற்றிகரமான நடைமுறையாக இருக்கிறது.

கட்டணம் என்பது அரசு போக்குவரத்துக் கழகங்களில் என்ன கட்டணமோ அதே கட்டணம்தான். பேருந்துகள் புறப்படும் பொழுது பயணச்சீட்டு கொடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. அது மட்டுமன்றி அப்பேருந்துகளின் முன்பக்கம் இது ஒப்பந்த அடிப்படையில் அரசு இயக்குகின்ற வாகனம் அரசு நிர்ணயித்துள்ள கட்டணம் ஆகிய விவரங்கள் ஒட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டினை காட்டிலும் தற்போது கூடுதலான நபர்களே பயணம் மேற்கொண்டுள்ளனர். கடந்த ஆண்டிலும் அதற்கு முந்தைய ஆண்டை காட்டிலும் அதிகமான நபர்கள் பயணம் செய்திருந்தனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மீது நம்பிக்கை கொண்டு அரசு பேருந்துகளில் பொதுமக்கள் பயணம் மேற்கொள்கின்றனர் என்பதையே இதுகாட்டுகிறது. காற்ற முத்த தாழ்வு மண்டலங்கள் ஏற்படும் காலங்களில் அனைத்து பகுதிகளிலும் உரிய பணிகளை மேற்கொள்வதற்கு அனைத்து மின்துறை பணியாளர்களுக்கு தயாராக இருப்பதற்கு அறிவுறுத்தபட்டிருக்கிறது. காற்ற முத்த தாழ்வு மண்டலங்கள் வருகின்ற போது காற்று பலமாக வீசி மின்கம்பங்கள் சாய்ந்தால் மின்கம்பிகள் மாற்றி சரிசெய்ய ஏதுவாக போதிய மின்கம்பங்களை இருப்பில் வைத்துகொள்ளவும், பணியாளர்கள் எந்த நேரத்திலும் தொடர்ந்து கவனத்துடன் இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்கு பிரச்சனை ஏற்பட்டாலும் அதனை சமாளிப்பதற்கு மின்துறையினர் அனைவரும் தயார் நிலையில் உள்ளனர் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட்,கும்பகோணம் நிர்வாக இயக்குநர் தசரதன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழு) லிட், கடலூர் மண்டலம், பொது மேலாளர் எஸ்.பாண்டியன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் பொது மேலாளர் டி.சதீஸ்குமார், ராம்குமார், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, விருத்தாச்சலம் பணிமனை கிளை மேலாளர் ரவி, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், பொன்.செல்வம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், அரியலூர் தொமுச செயலாளர் பி.வி.அன்பழகன், மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள், மாவட்ட, ஒன்றிய கழக தோழர்கள், மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கம்

## (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287)

## நிர்வாகிகள் தேர்தல்

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) நிர்வாகிகள் தேர்தல் தொடர்பான அறிவிப்பு கடந்த 28.02.2025 அன்று வெளியிடப்பட்டு வேட்பு மனுக்கள் பெறப்பட்டது. தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் அந்த வேட்பு மனுக்கள் அடிப்படையில் தேர்தலை நடத்திட 11.10.2025 அன்று அறிவிப்பு செய்யப்பட்டது. இந்நிலையில் வாக்காளர்கள், வேட்பாளர்கள் இறப்பு, பணி ஓய்வு, இடமாற்றம் காரணமாக பணிமனை பதவிகளை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத நிலையை சரி செய்திட கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதை ஏற்று வாக்காளர் பட்டியலை உரிய திருத்தங்கள் செய்தும், அதற்கேற்ப பதவிகளின் எண்ணிக்கையை மறு கணக்கீடுகள் செய்தும் புதிதாக வேட்புமனுக்கள் பெற்று தேர்தலை நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் தயாரித்து வெளியிட்டு புதிதாக வேட்புமனுக்கள் பெற்று கீழ்கண்ட அட்டவணைப்படி நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதற்கு, தொ.மு.ச. பேரவை பொருளாளர் கோ.சி. வள்ளுவன் அவர்கள் மேலிடப் பார்வையாளராகவும், வழக்கறிஞர் அ. சரவணன் (கழக தணிக்கைக்குழு உறுப்பினர்) அவர்கள் தேர்தல் ஆணையாளராகவும், ஆணையாளரால் நியமிக்கப்படும் துணை ஆணையாளர்களைக் கொண்டு பணிமனைத் தேர்தல் நடத்தப்படும்.

### தேர்தல் கால அட்டவணை
### பணிமனை நிர்வாகிகள் தேர்தல்

**வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் – (24 சந்தா பட்டியல்படி)பணிமனைகள் தோறும்) 05.11.2025, காலை 11.00 மணி**

**வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் – 09.11.2025, காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**

**இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள் தோறும்) – 11.11.2025, காலை 10.00 மணி**

**வேட்புமனு படிவம் வழங்குதல் – 12.11.2025, காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை**

**வேட்புமனு தாக்கல் – 13.11.2025, காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை**

**வேட்புமனு பரிசீலனை – 15.11.2025, காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**

**தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் – 16.11.2025, காலை 11.00 மணி**

**வேட்புமனு திரும்பப் பெறுதல் – 17.11.2025, காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

**இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் – 18.11.2025, காலை 11.00 மணி**

**வாக்குப் பதிவு – 23.11.2025 காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

பணிமனை நிர்வாகிகள் தேர்தலுக்கான வேட்புமனு படிவம் வழங்குதல், வேட்புமனு தாக்கல், பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல், வாக்குப்பதிவு ஆகியவை அந்தந்த பணிமனைகளில் நடைபெறும். வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

ஆணையாளரின் முடிவே இறுதியானது.

பணிமனைகள் தேர்தல் முடிந்தவுடன் மத்தியச் சங்கத் தேர்தல் அறிவிப்பு மற்றும் அட்டவணை வெளியிடப்படும்.

"கலைஞரகம்"
சென்னை - 17
நாள் : 18 - 10 - 2025

**மு.சண்முகம்**
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை

## மதுரை வடக்கு மாவட்டம்

## தலைமைச் செயற்குழு உறுப்பினர் - பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புக்களுக்கான தேர்தல் - தேர்தல் முடிவு!

### தலைமைக் கழக அறிவிப்பு!

"மதுரை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதாலும் - பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அ.முத்தையன் அவர்கள் அலங்காநல்லூர் வடக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள தாலும், மதுரை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புக்களுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, அக்டோபர் 18 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்"" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மதுரை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு ஆர்.பாலாஜி மற்றும் பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு ஆர்.கிரி ஆகியோர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**மதுரை வடக்கு மாவட்டம்,**
**தலைமைச் செயற்குழு உறுப்பினராக**
திரு. ஆர். பாலாஜி
பி-203, பாண்டியா ஹோம்ஸ்,
சாதனா பள்ளி அருகில், டி.பி.எம்.நகர்,
விராட்டிபத்து, மதுரை-625 016 அவர்களும்;

**பொதுக்குழு உறுப்பின**ராக
திரு. ஆர். கிரி
1-3-30, நடுத் தெரு, பேட்டை,
சோழவந்தான், வாடிப்பட்டி தாலுக்கா,
மதுரை மாவட்டம் அவர்களும்
தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 18.10.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோட்டை பி.ஏ.ரபீக்
### அக்டோபர் 20 (1993)



**இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**கோவை உக்கடம் பகுதி 35 மற்றும் 41வது வார்டு இளைஞர் அணிச் செயலாளராகவும், கோவை மாநகர் இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**2007ல் திருநெல்வேலியில் நடைபெற்ற இளைஞர் அணி முதல் மாநாட்டு கொடிமேடைக்கு இவரது பெயர் சூட்டப்பட்டது**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கும்முடிப்பூண்டி கி. வேணு
### அக்டோபர் 20 (2023)



**சிறுவயதிலேயே கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கிய இவர், கிளைச் செயலாளராகவும் – 1973 முதல் ஒன்றியச் செயலாளராக ஐந்து முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – மாவட்டச் செயலாளராக நான்கு முறையும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.**

**1989, 1996 ஆகிய இரண்டு முறை, கும்மிடிபூண்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிவர்.**

**"கழகம் களம் அமைத்த நேரத்திலெல்லாம், அந்தக் களத்திலே முதல் அணியின் சிப்பாய்களில் ஒருவராக இருந்து தன்னை தீயாகத்தீயிலே புடம்போட்டு எடுத்துக் கொண்டவர் தம்பி வேணு" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**2021ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் "கலைஞர் விருது" வழங்கிச் சிறப்பித்ததோடு, "தமிழ்நாட்டின் வட எல்லையான திருவள்ளூர் மாவட்டத்தில் கழகத்தைக் கட்டிக் காத்த தீரர் அருமைச் சகோதரர் கும்மிடிப்பூண்டி கி.வேணு எத்தகைய இடர் வரினும் எதிர்த்து நிற்கும் அஞ்சாத நெஞ்சுக்குச் சொந்தக்காரர். மிசா சிறைவாசத்தில் என்னோடும், கருப்புக் கொடி போராட்டத்தில் ஈடுபட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடும் சிறையில் வாடியவர் அவர்." என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**